**ஊடக அறிக்கை**

**பேர்ன் 19 டிசம்பர் 2019**

**இலங்கைக்கும் சுவிட்சர்லாந்துக்கும் இடையில் உயர்மட்ட தொடர்பு: இலங்கை வெளிவிவகார அமைச்சரை தொலைபேசியில் தொடர்புகொண்ட பெடரல் கவுன்ஸிலர் இக்னாசியோ காசிஸ், கலந்துரையாடல்களை தொடர இராஜதந்திரியை அனுப்பிவைப்பு**

தற்பொழுது தோன்றியுள்ள பிரச்சினையைத் தீர்க்க சுவிட்சர்லாந்து தொடர்ந்தும் இலங்கையுடன் உயர்மட்ட பேச்சுக்களை நடத்தி வருகிறது. பெடரல் கவுன்ஸிலர் இக்னாசியா காசிஸ், சக வெளிவிவகார அமைச்சரான தினேஸ் குணவர்த்தனவை 2019 டிசம்பர் 18ஆம் திகதி தொலைபேசியில் தொடர்புகொண்டு முன்னாள் தூதுவர் ஜோர்க் பிரீடனை இலங்கைக்கு அனுப்புவதாகத் தெரிவித்திருந்தார். இந்த அனுபவம் வாய்ந்த தூதுவரின் தலைமையில் கொழும்பில் உள்ள தூதரகத்தின் பாதுகாப்புடன் தெடர்புபட்ட சம்பவத்தை தெளிவுபடுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படவுள்ளன. தனது பணியாளர்களின் உடல்நிலை மற்றும் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதுடன், மேலதிக நடவடிக்கைகளின் போது இவற்றைப் பாதுகாக்க வேண்டியது இலங்கை அதிகாரிகளின் பொறுப்பென சுவிஸ் மத்திய வெளிவிவகாரத் திணைக்களம் கருதுவதாகவும் காசிஸ் வலியுறுத்தியுள்ளார்.

குணவர்த்தனவுடனான தொலைபேசி உரையாடலின்போது சுவிட்சர்லாந்தின் நிலைப்பாட்டை காசிஸ் கோடிட்டுக் காட்டியிருந்தார். பாதுகாப்புடன் தெடர்புபட்ட சம்பவமானது சுவிஸ் தூதரகத்தின் உள்ளூர் பணியாளரின் உடல்நிலையை மோசமாகப் பாதித்துள்ளது. தொழில்தருணர் என்ற ரீதியில் மத்திய வெளிவிவகார திணைக்களம் சகல பணியாளரிகளினதும் உடல்நிலை மற்றும் பாதுகாப்பு முன்னுரிமையளிக்கிறது. இதனடிப்படையில் தற்போதைய விவகாரத்தில் சம்பந்தப்பட்ட தூதுரகப் பணியாளர்கள் உள்ளடங்கலாக மத்திய வெளிவிவகார திணைக்களத்தின் பணியாளர்களின் உடல்நிலை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இலங்கை அதிகாரிகளின் கடமை என்பதையும் காசிஸ் குறிப்பிட்டிருந்தார்.

சம்பந்தப்பட்ட விசாரணையை மேற்கெள்ளும் நீதவான் உள்ளூர் பணியாளரின் உடல்நிலையை எவ்வகையிலும் கருத்தில் கெள்ளாது, அவரை முற்தடுப்புக்காவலில் வைக்க எடுத்த முடிவு குறித்தும் காசிஸ் தனது கவலையை வெளிப்படுத்தியிருந்தார். எனவே மனிதாபிமான அடிப்படையில் பணியாளரை மருத்துவமனை போன்ற பொருத்தமான இடத்துக்கு மாற்றுமாறும் குணவர்த்தனவிடம் கோரிக்கைவிடுத்தார். தூதரகத்தில் உள்ள சகல பணியாளரின் உடல்நிலை மற்றும் பாதுகாப்பு இலங்கை அதிகாரிகளே பொறுப்பென சுவிட்சர்லாந்து கருதுகிறது.

கொழும்பிலுள்ள சுவிஸ் தூதுவர் ஹான்ஸ்பீட்டர் மோக், ஏற்கனவே கடந்த செவ்வாய்க் கிழமை இலங்கையின் சட்டமா அதிபரைச் சந்தித்து, இந்த உயர்மட்ட வழக்கு சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் நாடு என்ற இலங்கையின் நற்பெயருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

**ஆக்கபூர்வமான தீர்வை நாடுகிறோம்**

குணவர்த்தனவுடான தனது தொலைபேசி உரையாடலின்போது, உயர்மட்டத்திலான ஊடக பிரசாரம், தனியுரிமை பாதுகாப்பு இன்மை மற்றும் வழக்கு நடவடிக்கைகளின் முடிவுகளை முன்கூட்டியே தெரிவிக்கும் வகையலைான பொது அறிக்கைகள் ஆகியவை சுவிஸ் தூதரக பணியாளரை ஆபத்தில் தள்ளுவது மாத்திரமன்றி, இந்த நிகழ்வை தெளிவுபடுத்துவதற்கு காணப்படும் நம்பிக்கையையும் இல்லாமல் செய்துவட்டதென காசிஸ் குறிப்பிட்டார்.

இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து இச்சம்பவத்தைத் தெளிவுபடுத்துவதில் சுவிட்சர்லாந்து ஆர்வமாக இருப்பதாக வலியுறுத்திய காசிஸ், இதனால்தான் நல்ல அனுபவம் மிக்க இராஜதந்திரியான முன்னாள் தூதுவர் ஜோர்க் பிரீடன் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் கூறினார். பிரீடன் இலங்கை அதிகாரிகளுடன் தொடர்பாடல்களை ஏற்படுத்தி சாத்தியமான தீர்வுகளை ஆராய்வாரென எதிர்பார்க்கப்படுவதுடன், சுவிஸ்

தூதுரகத்திற்கும் ஆதரவளிப்பார். இராஜதந்திர மட்டத்திலான இந்தக் கூடுதல் தொடர்பு சுவிட்சர்லாந்திற்கும் இலங்கைக்கும் இடையிலான நம்பிக்கையின் அடிப்படையை வலுப்படுத்தும் நோக்காகக் கொண்டதாகும்.

காசிசுடனான தொலைபேசி உரையாடலைத் தொடர்ந்து பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் நோக்கில் அமைச்சர் குணவர்த்தன, மோக் மற்றும் பிரீடன் ஆகியோரை இன்று சந்தித்துக் கலந்துரையாடினார். தற்போதைய வழக்கில் குற்றமற்றவர் எனக் கருதும் கொள்கை மற்றும் தூதுரக பணியாளரின் உடல்நிலை மற்றும் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் சுவிஸ் தூதுவர் சுட்டிக்காட்டினார். இலங்கையுடன் நெருக்கமான உறவைப் பேணவும், நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவவும் சுவிட்சர்லாந்து விரும்புகிறது.